**இலங்கை கலைச் சபை - 2023**

----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை கலைச் சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பானது இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்..

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான, தன்மையானது இந்நிலைக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை
- வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும்.

எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.
-

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரணமாங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 13 (8) ஆம் பிரிவின் (7) ஆம் உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகள் | 2023 மே 30 ஆந் திகதி சபையின் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான விபரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு 03 மாதங்களுக்குள் பதில் வழங்கப்பட வேண்டிய போதிலும் இந்த அறிக்கைத் திகதிவரையும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டிலிருந்து விபரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு 03 மாதங்களுக்குள் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | அதிகாரச் சட்டத்திலுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க, | சேவை நிலையத்தில் இருக்கின்ற ஊழியர்களின் எண்ணிக்கையைப் பற்றி கவனிக்காது அனைத்து அரசாங்க நிறுவனங்களின் உத்தியோகத்தர்களும் | இலங்கை கலைச் சபையினால் முறைப்படியாக வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவேடும் | சுற்றறிக்கையின் பிரகாரம் விரல் அடையாளமிடும் இயந்திரத்தினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009 (i) ஆம் இலக்க மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | அலுவலகத்திற்கு வருகை தருதல் மற்றும் வெளிச்செல்லலினை உறுதிப்படுத்துவதற்காக விரல் அடையாளமிடும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் சபையினால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விடுமுறைப்பதிவேடும் நிறைவேற்றுச் சபையின் அங்கீகாரம் மற்றும் இலங்கை கலைச் சபையின் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் பேணப்பட்டு வருகின்றது. | எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 259,079 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 523,304 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 782,383 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு ஒட்டுமொத்த செலவுகள் ரூபா 3,087,924 இனால் அதிகரித்தமைக்கு நேரொத்த வகையில் மீண்டுவரும் மற்றும் மூலதன நிதி ஏற்பாடு கிடைத்தமையுடன் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 3,870,307 இனால் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை கலைச் சபையின் கீழ் ஆண்டின் போது 10 உப சபைகள் தோற்றுவிக்கப்பட்டு அவற்றிற்காக ரூபா 1,000,000 நிதி ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தும் ஒவ்வொரு உப சபையினால் ஆண்டின் போது அமுல்ப்படுத்துவதற்கு எதிர்பார்த்த நிகழ்ச்சித்திட்டங்கள் என்ன என்பது உறுதியாக ஆண்டின் ஆரம்பத்தின் போது அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 1952 இன் 18 ஆம் இலக்க கலைச்சபை அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவில் குறிப்பிடப்படாத எனினும் அதிகாரச்சட்டத்துக்கான உத்தேச திருத்தங்களில் | பதில் வழங்கப்படவில்லை. | ஆண்டின் போது அமுல்ப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக ஆண்டின் ஆரம்பத்தில் உறுதியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்படாத உத்தேச உபசபைகளுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டுள்ள புகைப்பட ஆலோசனை சபைக்காகவும் ரூபா 100,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்திருந்ததன் காரணமாக அந்த நிதி ஏற்பாடு விளைவற்றுக் காணப்பட்டது. | | |
| (ஆ) | வெளியீடுகளை வெளிப்படுத்தும'; குறிக்கோளினை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு கலைத்துறையினையும் உள்ளடக்கும் வகையில் மூன்று மாத கலைச் சஞ்சிகையினை அச்சிடுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் காலாண்டு அடிப்படையில் சஞ்சிகைகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2022 ‘‘சனவரி - மார்ச் வெளியீடாக’’ e-verion சஞ்சிகையும் 2023 ஒக்தோபர் - திசெம்பர் வெளியீடாக அச்சிடப்பட்ட சஞ்சிகையும் வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறே ஒவ்வொரு விடயத்துறையினையும் உள்ளடக்கும் வகையில் மிகவும் உயர்வான உள்ளடக்கத்தினைக் கொண்டதாக இந்த சஞ்சிகையை அச்சிடக்கூடியதாக இருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அச்சிடும் போது அதிக செலவு செய்ய வேண்டி இருந்ததனாலும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துதலில் அதிக நட்டம் உள்ளதனாலும் காலாண்டு ரீதியாக வெளியிடப்படுகின்ற கலைச் சஞ்சிகையானது ஒரு இலத்திரனியல் உரையாக (e-version) வெளியிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பல குறிக்கோள்களை நிறைவேற்றக்கூடியதாக இருந்தது என தெரிவிக்கப்பட்டது. | முறையாகத் திட்டமிடப்பட்ட ஒரு வேலைத் திட்டத்தினூடாக செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |